# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 34/2020**

பெயர்: **சாந்தி** நாள்: 08.02.2024

பி.வா.சா.1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.1 – சாந்தி - சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.11</u>

23.10.2015 ம் தேதி எனது தகப்பனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்திலிருந்து 2 ஏக்கர் நிலத்தை 2 ம் வாதியின் மகனான சரவணகுமாருக்கு வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து எந்த கிரையத்தையும் கொடுக்கவில்லை. 23.10.2015 ம் தேதி 2 ம் வாதியின் மகனான சரவணகுமாருக்கு வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் ஒரு கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள் என்றாலும், அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் அசல் வழக்கில் எதிர் கோருரிமை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 15.10.2018 ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் செல்லாது என்று கோர எனக்கு எந்த அருகதையும் இல்லையென்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்து வாதிகளின் தாயார் மாராயம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதில், அதை வாதிகள் பாகம் பிரித்துக் கொள்ள உரிமையுள்ளது என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் கோருரிமை வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. அசல் வழக்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பாகவேண்டியது என்று சொன்னால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11.17</u>

ஒப்பம்/சாந்தி

ஒப்பம்/ திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.